**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

(2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், கார்த்திகைத் திங்கள் 04 ம் நாள்)

**இ.ம.எண். 3/2024**

**in**

**அ.வ.எண். 137/2023**

1. முத்துலட்சுமி
2. ஜீவா
3. சங்கீதா ... மனுதாரர்கள்/
3 முதல் 5 பிரதிவாதிகள்

/எதிர்/

1. பழனாள்
2. குமார்
3. செல்வன் .... 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்
/வாதிகள்
4. மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர்
5. வட்டாட்சியர், காங்கயம் .... 4, 5 எதிர்மனுதாரர்கள்
/1, 2 பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 07.11.2024 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சிவசாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.M.நிஷார்பாபு, M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர்

திரு.V.முருகேசன்,B.Com.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## உத்தரவு

மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 03.02.2024 ம் தேதி அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 ன் படி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

i) இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் 3 முதல் 5 பிரதிவாதிகளாவார்கள். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கில் கடந்த 03.02.2024 ம் தேதி மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி தேதியில் 1ம் மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் 1ம் மனுதாரரால் நீதிமன்றத்தில் ஆஜராகி 1ம் மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பிலும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பிலும் தாக்கல் செய்ய வேண்டிய எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது.

ii) இந்நிலையில் மனுதாரர்கள் தங்களது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு விபரம் குறித்து கேட்டு தெரிந்துகொண்ட போதுதான் மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 03.02.2024ம் தேதி ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரிய வந்தது. மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் வேண்டுமென்றோ, அஜாக்கிரதையாகவோ எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தான் அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது.

iii) எனவே மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 03.02.2024ம் தேதியன்று அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2) 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

i) மனுதாரர்கள் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டியது.

ii) மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் 03.02.2024ம் தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு வாய்தா போடப்பட்டிருந்த தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் 3, 4, 5 பிரதிவாதிகளுக்கு

எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி மனுவில் 1 முதல் 3 மனுதாரர்கள் இறந்துபோன பழனி (எ) பழனிச்சாமியின் இரண்டாவது மனைவி மற்றும் மக்கள் ஆவார்கள். 1ம் எதிர்மனுதாரரான பழனாள் இறந்துபோன பழனி (எ) பழனிசாமியின் சட்டப்படி முதல் மனைவி ஆவார். 1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதி உயிருடன் இருந்தபோதே விவாகரத்து ஏதும் பெறாமல் இறந்து போன பழனி (எ) பழனிசாமி 1ம் மனுதாரர்/3ம் பிரதிவாதியை சட்டத்திற்கு முரணான வகையில் திருமணம் செய்துகொண்டார். அத்திருமணத்தின் பயனாக 2 மற்றும் 3 மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள் குழந்தைகளாக பிறந்தனர்.

iii) மேற்படி அசல் வழக்கில் இறந்துபோன பழனி (எ) பழனிசாமிக்கு வாரிசாக 1 முதல் 3 வாதிகளையும் மற்றும் 4, 5 பிரதிவாதிகளையும் விளம்புகை செய்யுமாறு வாதிகள் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். இம்மனுவின் 1ம் மனுதாரரும், அசல் வழக்கில் 3ம் பிரதிவாதியுமான முத்துலட்சுமியை அவசிய கட்சிதாரராக மட்டுமே வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள். 1ம் மனுதாரர்/3ம் பிரதிவாதியான முத்துலட்சுமி இறந்துபோன பழனி (எ) பழனிசாமிக்கு எவ்விதத்திலும் சட்டப்படியான வாரிசாகமாட்டார்.

iv) மேற்படி மனுவில் 1ம் மனுதாரர் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்று சொல்லியுள்ள சங்கதிகளை மனுதாரர்களே நிரூபணம் செய்ய வேண்டியது. 1ம் மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததற்கான எவ்விதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. உண்மையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து இறந்து போன பழனி (எ) பழனிசாமியின் இறப்பிற்கு பின்பு கிடைக்கக்கூடிய பணபலன்கள் மற்றும் பென்சன் ஆகியவற்றை சட்டத்திற்கு

முரணான வகையில் பெற வேண்டி இம்மனுவின் மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் செயல்பட்டு வருகின்றனர்.

v) மேலும் அசல் வழக்கில் வாதிகள் கோரிய பரிகாரத்தின்படி 1 முதல் 3 வரையுள்ள வாதிகள் மற்றும் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் மட்டுமே இறந்துபோன பழனி (எ) பழனிசாமிக்கு சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். மேற்படி மனுதாரர்களின் நடவடிக்கையானது நீதிமன்ற நடவடிக்கைகளை கால விரயப்படுத்தும் நோக்கத்துடன் செய்பவை ஆகும். எனவே வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிருரை சுருக்கமாகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**<u>5. தீர்வு:–</u>**

6. மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் கடந்த 03.02.2024ம் தேதி மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது என்றும் மேற்படி தேதியில் 1ம் மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் 1ம் மனுதாரரால் நீதிமன்றத்தில் ஆஜராகி 1ம் மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பிலும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பிலும் தாக்கல் செய்ய வேண்டிய எதிர்வழக்குரை

தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்றும் இந்நிலையில் மனுதாரர்கள் தங்களது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு விபரம் குறித்து கேட்டு தெரிந்துகொண்ட போதுதான் மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 03.02.2024ம் தேதி ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரிய வந்தது என்றும் எனவே மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதி உயிருடன் இருந்தபோதே விவாகரத்து ஏதும் பெறாமல் இறந்து போன பழனி (எ) பழனிசாமி 1ம் மனுதாரர்/3ம் பிரதிவாதியை சட்டத்திற்கு முரணான வகையில் திருமணம் செய்துகொண்டார் என்றும் அத்திருமணத்தின் பயனாக 2 மற்றும் 3 மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள் குழந்தைகளாக பிறந்தனர் என்றும் இம்மனுவின் 1ம் மனுதாரரும், அசல் வழக்கில் 3ம் பிரதிவாதியுமான முத்துலட்சுமியை அவசிய கட்சிதாரராக மட்டுமே வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும் 1ம் மனுதாரர்/3ம் பிரதிவாதியான முத்துலட்சுமி இறந்துபோன பழனி (எ) பழனிசாமிக்கு எவ்விதத்திலும் சட்டப்படியான வாரிசாகமாட்டார் என்றும் 1ம் மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததற்கான எவ்விதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும் இம்மனுவானது நீதிமன்ற நடவடிக்கைகளை கால விரயப்படுத்தும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் கடந்த 14.03.2023ம் தேதியில் இறந்துபோன

பழனி (எ) பழனிச்சாமி என்பவருக்கு 1 முதல் 3 வாதிகள் மற்றும் 4, 5 பிரதிவாதிகள் மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதிய வாய்ப்பளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் கடந்த 03.02.2024 அன்று 3 முதல் 5 பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள். கடந்த 02.03.2024 அன்று 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு கடந்த 03.06.2024 அன்று 3 முதல் 5 பிரதிவாதிகள் மீது பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 1ம் மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததற்கான எவ்விதமான ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் இம்மனுவானது நீதிமன்ற நடவடிக்கைகளை கால விரயப்படுத்தும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது இறந்துபோன பழனி (எ) பழனிச்சாமி என்பவருக்கு 1 முதல் 3 வாதிகள் மற்றும் 4, 5 பிரதிவாதிகள் மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் மனுதாரர்கள் இம்மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் இம்மனுவுடன் மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கின்

எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2024–ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2024.11.19 19:00:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2024.11.19 19:00:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.